Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.840/2022

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.அசிஸ் | Occupation | வனவர் |
| Father's name | அமல்ராஜ் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of November 2025.

21.11.2025

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னியாகுமரி வனஉயிர்கோட்டம் நாகர்கோவில் சமூக வனச்சரகம் கன்னியாகுமரி பிரிவில் வனவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் வனச்சரகம் W.புதுப்பட்டி பிரிவில் வனவராக பணியாற்றியபோது 14.03.2020 ம் தேதி காலை சுமார் 05.00 மணியளவில் வனச்சரக அலுவலர் கொடுத்த ரகசிய தகவலின்படி எனது தலைமையிலான குழுவில் குன்னூர் பீட் வனக்காப்பாளர் திருமதி. சாந்தா, மிகையிடை வனக்காவலர் திரு.முத்தையா, ரெங்கர் தீர்த்தம் வனக்காப்பாளர் திரு.பெரியசாமி, அழகர் கோவில் வனக்காப்பாளர் திரு.ரமேஷ், ஆகியோர் கொண்ட தனிக்குழுவினர் குன்னூர் பீட் கணவாய் சராகம் பகுதியில் ரோந்து மேற்கொண்ட போது காலை சுமார் 06.00 மணியளவில் புதருக்குள் மறைந்திருந்து எங்களை கண்டதும் தப்பிக்க முயன்ற நபரை பிடித்து விசாரணை செய்ததில் அவருடைய பெயர் கார்த்திக்ராஜா என்பதும் த/பெ.முத்தையா என்பதும் வயது சுமார் 22 செம்பட்டையான் காலனியை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. மேலும் விசாரணையில் அவர் கையில் இரும்பு பிடியுடன் கூடிய ஒரு கத்தியும், மரப்பிடியுடன் கூடிய ஒரு கத்தியும், மகா சிமெண்ட் பையில் ஒரு பச்சைநிற வலையில் இரண்டு அல்ட்ராடெக் சிமெண்ட் பைகளும் இருப்பது கண்டுபிடித்து விசாரணை செய்ததில்

வனவிலங்குகள் நடமாடும் பாதையில் வலைகளை விரித்து அவற்றை பிடித்து கத்தியினால் அறுத்து மாமிசத்தை பிரித்து சாக்கு பையிலிட்டு எடுத்து செல்வதற்காக கொண்டுவந்தார். மேலும் 2 தினங்களுக்கு முன்னால் ஒரு மானை கொய்யா பழத்தில் நாட்டு வெடிகுண்டை தினித்து அந்த வெடிகுண்டு வெடித்ததில் மானின் தலை சிதறி கொன்றதை ஒப்புக்கொண்டார். மேலும் அப்பகுதியில் சுற்றிபார்த்தபோது அவர் வந்த TN 84 Z 6890 என்ற எண் கொண்ட கருப்பு நிற Hero Passion Pro இருசக்கர வாகனத்தை கைப்பற்றி ஸ்தலத்திலேயே மகஜர் பதிவு செய்து மேலும் வனக்காப்பாளரால் H நமுனா படிவம் பூர்த்தி செய்து எதிரியை விசாரணைக்காக வனச்சரக அலுவலகம் கொண்டு சென்று விசாரணை செய்ததில் 03.03.2020 ம் தேதி ரெங்கர் தீர்த்தம் பீட் பகுதியிலும், இதே போல் நாட்டு வெடிகுண்டு வைத்து வேட்டையாட முயற்றி செய்ததும் வேட்டை நடைபெற்ற நேரம் காலை பொழுது என்பதால் வேட்டையாடி மாமிசத்தை பிரித்து எடுத்துச்சென்றால் மக்கள் தெரிந்துகொள்வார்கள் என்பதால் அங்கேயே விட்டுச்சென்றதாக கூறிவிட்டார். மேலும் எதிரி 09.08.2019 ம் தேதி அழகர் கோவில் பீட் பகுதியில் நாட்டு வெடிகுண்டு வைத்து வேட்டையாடியதையும் ஒப்புக்கொண்டார். எதிரியை கைது செய்து திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர்.2 நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையிலடைக்கப்பட்டார். ஏற்கனவே அசாஆ.2 மற்றும் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஸ்தல மகஜர் மற்றும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.